


Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 இதழ்: 283 06.11.2024 பக்கங்கள்:05 editorml21@gmail.com விலை:75/-

# அரச நிர்வாகத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும்

## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க

அடுத்த ஐந்து வருடங்களில் கிராமிய மக்களின் வறுமையை இல்லாதொழித்து கிராமிய மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்துவது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்துடன் நேற்று (05) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

02





# கல்முனை நான்கு சபைகளாக பிரித்து வழங்கப்பட வேண்டும்

### வேட்பாளர் சபீஸ்

(ஸைபுல் ஹபீஸ்)

கல்முனை நான்கு சபைகளாக பிரிக்கப்பட வேண்டும் அப்போதுதான் அடுத்த சந்ததிகள் நிம்மதியாக வாழ முடியும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர் எஸ். எம்.சபீஸ் தெரிவித்தார். கல்முனை பிரதேசத்திலுள்ள ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

02



# பாதுகாப்பு குறைக்கப்பட்டமை தொடர்பில் பாதுகாப்பு செயலாளருக்கு சந்திரிக்கா கடிதம்

தமக்கு வழங்கப்பட்டுள்ள மெய்ப்பாதுகாவலர்கள் குறைக்கப்பட்டமை தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

02



# முஸ்லிம் தலைமைகளை வேரறுக்க தேசிய மாற்றத்துக்குள் சதித்திட்டம்

### ரிஷாட் எச்சரிக்கை!

முஸ்லிம் தலைமைகளை அரசியலிலிருந்து ஓரங்கட்டும் சதி முயற்சிகளிலிருந்து சமூகம் விழிப்படைய வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உலமாக் குழுவின் ஏற்பாட்டில், "சிறுபான்மை பிரதிநிதித்துவமும்

02



## அரச நிர்வாகத்தில்......

அரசாங்கத்தின் அந்த வேலைத்-திட்டம் வெற்றியடைவதற்கு அரச அதிகாரிகளின் ஆதரவு மிகவும் அவசியமானது எனத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அரச அதிகாரிகளின் அனுபவமானது அதற்கு பெரும் உறுதுணையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் அரச சேவைகள் செயற்படும் விதத்திற்கும் இடையில் சில இடைவெளி காணப்படுவதாகவும், நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு இதுவரையில் அரச நிர்வாகம் செயற்பட்டு வந்த விதத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டில் மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவது அரசாங்கத்தின் முக்கிய பணி எனவும், மோசடி மற்றும் ஊழல் காரணமாக நாட்டின் திட்டங்களை நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், அரச சேவையில் அரசியல் ரீதியிலான தலையீடுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும், அரச உத்தியோகத்தர்களுக்கு சுதந்திரமாக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பிரதேச அபிவிருத்திக்காக அரச அதிகாரிகளுக்கு விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, மக்கள் சேவைகளை குறைக்காமல் அரச சேவையில் மேற்கொள்ளப்படும் தேவையற்ற செலவுகளை குறைக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

## பாதுகாப்பு குறைக்கப்பட்டமை.....

தனது கணவர் விஜய குமாரதுங்க கொலை செய்யப்பட்டது போல, மரண அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள தம்மையும் கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி குறித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விசேட பாதுகாப்பு பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரினால் தமக்கான பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை 50இல் இருந்து 30 ஆகக் குறைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்காக 200க்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில், எந்த அளவுகோலின்படி தமக்கு 30 பாதுகாவலர்களை மாத்திரம் வழங்கத் முடிவு செய்யப் பட்டுள்ளமைக்கான காரணம் என்னவென்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க குறித்த கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

## முஸ்லிம் தலைமைகளை......

உலமாக்களின் பங்களிப்பும்” என்ற கருப்பொருளில், வன்னி மாவட்ட உலமாக்களுக்கான மாநாடு, ஞாயிற்றுக்கிழமை (03) மன்னாரில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்,

“தேசிய மக்கள் சக்தி வென்றுவிட்டது என்பதற்காக, முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை இல்லாதொழிக்க விரும்புகின்றீர்களா? பாராளுமன்ற அரசியலில், சமூகங்களுக்கென்று தனித்தனி பிரதிநிதித்துவங்கள் அவசியம். தேசிய அரசியலில் மாற்றம் ஏற்பட்டுள்ள மைக்காக, சமூகங்களின் பிரதிநிதித்துவங்களை இல்லாமற் செய்ய இயலாது. எம்மத்தியில் உள்ள சிலர் இவ்வேலைகளைச் செய்வதற்கு துணிந்துள்ளனர். இந்த சதிகளுக்கு துணைபோயுள்ள நமது சகோதரர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உலமாக்களுக்கும் உள்ளது.

பிரதிநிதித்துவங்கள் இல்லாத சமூகங்கள், திசை தவறும் ஆபத்துக்களை எதிர்கொள்ளலாம். முறையான தலைமைத்துவங்கள் இருந்தபோதும், உணர்ச்சி, எழுச்சிகள் ஏற்பட்டதால், தமிழ் இளைஞர்கள் தவறான வழி சென்ற வரலாறு நமது நாட்டில் உள்ளது. இதனால், ஏற்பட்ட யுத்தம் சகல சமூகங்களையுமே பாதித்திருந்தன. இதுபோன்ற எழுச்சியை, இப்போது ஏற்பட்டுள்ள மாற்றமும் ஏற்படுத்துமோ என நாங்கள் அஞ்சுகின்றோம்.

புத்தளத்தில், ஒரு முஸ்லிம் எம்.பி. வரக்கூடாதென்று முஸ்லிம்களையே சதி செய்யத் தூண்டியுள்ளனர். கொழும்பில் முஜிபுர் ரஹ்மான் வரக்கூடாதா? கண்டியில், ரவூப் ஹக்கீம் வென்றால் இவர்களுக்கென்ன பிரச்சினை. வன்னியில், எனது தலைமைத்-துவத்தை வேரறுக்கவும் வியூகங்கள் வகுக்கப்படுகின்றன.

தேசிய கட்சிகளின் கைப்பொம்மைகளாக இருக்கப்போகும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தால் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது. சமூகத்துக்கு ஏதாவது கெடுதிகள் அல்லது ஆபத்துக்கள் ஏற்பட்டால், எங்களால்தான் பேச முடியும். எனவே, எமக்கான பிரதிநிதித்துவங்களை நாமே வென்றெடுக்க வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## கல்முனை நான்கு.....

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த காலங்களில் கரவாகுப்பற்று நான்கு சபைகளாக காணப்பட்டது. சனத்தொகையின் அதிகரிப்புக்கு ஏற்ப சபைகள் பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதே நியதியாகும்.

சாய்ந்தமருதுக்கு தனியான சபை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது நான்கு சபைகளாக பிரித்து வழங்கும் பொருட்டு அப்போது இராஜங்க அமைச்சராக இருந்த ஹரீஸிடம் தேசிய காங்கிரஸ் தலைவர் கலந்துரையாடி அதற்கான உடன்பாடும் எட்டப்பட்டது. இருந்த போதிலும் தேர்தல் அறிவிக்கப்பட்டதால் இடைநிறுத்-தப்பட்டது.

சாய்ந்தமருது மக்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சபையை மாத்திரம் வழங்கி ஏனைய மூன்று சபைகளையும் புறந்தள்ளி விடுவது வரலாற்று துரோகமாகும். ஆகையால் சாய்ந்தமருதுக்கு மாத்திரம் சபை கொடுக்க வேண்டும் என்று எண்ணினாரே தேசிய காங்கிரஸ் தலைவர் அப்போதே அமானிதத்தை சுமக்கும் தகுதியை அவர் இழந்து விட்டார்.

கல்முனை பாதுகாக்க வேண்டும் என்றே நாங்கள் அனைவரும் எண்ணி வருகின்றோம். அந்த வகையில் அதனை பாதுகாத்தவர் எமக்கெல்லாம் பக்கபலமாக இருந்தவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஹரிஸ் எம்.பி பாதுகாத்ததை நாங்கள் கண்கூடாக பார்த்திருக்கின்றோம். ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் கல்முனையை பாதுகாக்கவில்லை. ஹரிஸ் எம்.பிக்கு தற்காலிகமாக அதிகாரங்கள் இல்லாமல் போனாலும் முறையாக கல்முனையை நாங்கள் பாதுகாப்போம். தமிழ் மக்களும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். அனைத்தையும் இனரீதியாக வெட்டி எடுத்துக் கொண்டு ஓட நினைப்பது தவறு என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். சகல மக்களும் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதே எமது எண்ணமாக உள்ளது. அதனால் கல்முனையை முறையாக நான்காக பிரித்து அனைவருக்கும் அவர்களுக்குரிய அதிகாரத்தை வழங்குவதற்கு நாங்கள் ஒரு போதும் தடையாக இருக்க போவதில்லை.

மரண தண்டனை கைதிகளுக்கு கூட இறுதி நேரத்தில் அவர்களது அபிலாசைகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவது வழக்கமாகும். ஆனால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸிற்கு இறுதி நேரம் வரை எந்த சந்தர்ப்பத்தையும் வழங்காது ஏமாற்றியது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு செயலாகும் எனவும் தெரிவித்தார்.



# அரசியல் களம்

## பாராளுமன்ற தேர்தல் –2024

## ஜனாதிபதியின் படத்தை அலுவலகத்தில் தொங்கவிடும் கலாச்சாரம் நிறுத்தப்பட்டுள்ளது

### சுனில் ஹந்து நெத்தி தெரிவிப்பு



எமது நாட்டில் கடந்த காலங்களில் அரசாங்க அதிகாரிகள் தமது அலுவலகங்களில் தலைக்கு மேலே ஜனாதிபதியின் பெரிய புகைப்படங்களை தொங்கவிட்டு ஜனாதிபதிக்காக கடமை செய்தார்கள்.

ஆனால் தற்போதைய புதிய ஜனாதிபதி தனது புகைப்படத்தைத் தொங்க விடாமல் மக்களுக்காக பணியாற்றுமாறு கேட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் உயர்பீட உறுப்பினர் சுனில் ஹந்து நெத்தி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் புஹாரி முகம்மட் தலைமையில் ஏறாவூர் பிரதான வீதியோரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் வேட்பாளர் சாஜித் ரக்கீஸ் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

சுனில் ஹந்துநெத்தி இங்கு தொடர்ந்து பேசுகையில்..

கடந்தகாலங்களில் புதிதாக ஜனாதிபதியொருவர் தெரிவுசெய்யப்பட்டால் கிராம சேவையாளர் தொடக்கம் பொலிஸ் நிலையம் வரையிலான அனைத்து அரசாங்க காரியாலங்களிலும் விரைவாக ஜனாதிபதியின் பெரிய புகைப்படம் தொங்கவிடப்படும் நடைமுறை காணப்பட்டது.

சந்திரிகாவின் காலத்தில் சந்திரிக்காவுக்கு வயதான போதிலும் அழகான புகைப்படம் இருக்கும். மைத்திரியின் காலத்தில் வாயை ஓரமாகக் கிறுக்கி சிரிக்கும் படம் தொங்கவிடப்பட்டது. ரணில் காலத்திலும் அவ்வாறே நடைபெற்றது. ஆனால் தற்போதைய ஜனாதிபதி தோழர் அனுர குமார திசாநாயக்க முதல் பணிப்புரையாக தனது படத்தைத் தொங்கவிடக் கூடாது எனக் கேட்டுள்ளார்.

அதேநேரம் தற்போது தேர்தல் காலமாக இருப்பதனால் பழங்கால வீடியோக்கள் சமூக வலயதளங்களில் வைரலாகின்றன. எப்போது? எந்த இடத்தில் பேசினார் என்ற விளக்கங்கூட தெரிவிக்கப்படாதிருக்கும்.

அதுபோன்று சகோதரி சரோஜா சவித்ரா போல்ராஜ் என்பவர் கடந்த பல வருடங்களுக்கு முன்னர் பேசிய பேச்சொன்று தற்போது உலாவுகின்றன.

அவர் பேசுகின்ற பேச்சு எமது கட்சியின் கொள்கையல்ல. கட்சியின் கொள்கையினை ஜனாதிபதியே வெளியிடுவார். எனவே அவ்வாறான பேச்சுக்களை எவரும் எமது கட்சியின் கொள்கையாக நம்பிவிட வேண்டாம். இது முஸ்லிம் வாக்காளர்களைக் குழப்பமடையச் செய்வதற்கான சூழ்ச்சியாகும் என்றார்.

பாராளுமன்றத்தை கொள்ளையர்கள் அற்றதாக சுத்தப்படுத்துங்கள் என்று மக்கள் கூறினார்கள். இப்போது உங்களுக்குத் தெரியும். தேர்தல் நடைபெற முன்னரே பாராளுமன்றத்தின் அரைப்பகுதி சுத்தமாகிவிட்டது. அதிகம்பேர் தேர்தலில் போட்டியிடாமலே ஒதுங்கிவிட்டார்கள். அமீர்அலி, ஹிஸ்புல்லாஹ், அலி ஸாஹிர் மௌலானா போன்றவர்களுக்குச் சொல்லுங்கள் இப்போது உங்கள் காலம் முடிவடைந்து விட்டது. நீங்கள் வீட்டில் ஓய்வு பெறலாம் என்று கூறுங்கள். புதிய தலைமுறையினர் பாராளுமன்றுக்கு வரவேண்டும் நாட்டில் ஊழல் மோசடிகள் ஒழிக்கப்படவேண்டும் என்பதுவே மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

ஏறாவூர் மக்களின் வாக்குளைப்பெற்றுக் கொண்டு கொழும்பிலிருந்து நிருவாகம் செய்கின்ற பிரதிநிதி எமக்குத் தேவையில்லை. எமது வாக்குளைப் பெற்றுக் கொண்டு கொழும்புக்குச் சென்று வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற உறுப்பினர் எமக்கு வேண்டாம். அமைச்சுப் பதவிகளை பணத்திற்கு வியாபாரம் செய்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் எமக்குத் தேவையில்லை.

மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றக் கூடிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யுங்கள். ஏறாவூர் மண் எமக்குப்புதிதானதல்ல. இங்கு நீண்டகாலமாக அரசியல் செய்திருக்கின்றோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கடைசியாக இங்கு வந்த பேசும்போது அடுத்த தடைவை எமது ஜனாதிபதியின் ஆட்சியிலேயே இங்கு வருவேன் என்று சொன்னேன். அவ்வாறே செய்திருக்கின்றேன். அதேபோன்று இப்போது சொல்கின்றேன் ஒரு பாராளுமன்ற பிரதிநிதியை எடுத்துக் கொண்டுதான் அடுத்த முறை ஏறாவூருக்கு வருவேன் என்றார்.

## மக்களுக்கு நிம்மதி இல்லை என்றால் கட்சிகளும், தலைமைகளும் எதற்கு?

### வேட்பாளர் சபீஸ் காட்டம்



(நூருல் ஹுதா உமர்)

நிவாரணம் கொடுப்பதன் மூலம் மக்களை நிம்மதியாக வாழ வைக்க முடியாது. இளைஞர்களை சொந்த முயற்சியின் மூலம் தொழில் வழங்குனர்களாக மாற்றினால் மாத்திரமே மக்கள் நிம்மதியாக வாழ முடியும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்,

கடந்த வருடம் இஸ்மாயில் புரத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக போயிருந்தேன் அவ்வேளையில் அதிபரிடம் உங்கள் கணித பாட ஆசிரியர் யார் என்று கேட்டேன் தசாப்தங்களுக்கு மேல் கணித பாட ஆசிரியர் இந்த பாடசாலைக்கு இல்லை என்று சொன்னார்

இதைவிட கேவலம் என்ன இருக்க முடியும். அதிகாரிகளை தொடர்பு கொண்டு உங்கள் பிள்ளைகள் நல்ல முறையில் படியாது என்று சொன்னேன். தன் நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலையில் கணித பாட ஆசிரியர் இல்லையென்றால் அந்த பிள்ளைகள் எவ்வாறு வாழ்வில் முன்னேறுவார்கள் என்று கேட்டேன்

என்னைப் பொறுத்தமட்டில் 20 வயதுக்குள் தகுதி உடைய அனைத்துக் குழந்தைகளும் பட்டப்படிப்பை நிறைவு செய்பவர்களாக மாறினால் மாத்திரம் மக்கள் நிம்மதியாக வாழும் முறைமையை தோற்றுவிக்கலாம் எனக் கூறினார்

## கருணா-பிள்ளையான் ஆதரவாளர்கள் மோதல்

மட்டக்களப்பில், கருணா அம்மானின் கட்சி வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் மற்றும் பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் கருணா அம்மானின் கட்சி வேட்பாளர் ஒருவர் உட்பட 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம், ஜெயந்திபுரம் பகுதியில் (03) இடம்பெற்றுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். கருணாவின் வேட்பாளர் சென்று, எங்கள் சுவரொட்டிகளுக்கு மேல் சுவரொட்டிகளை ஒட்டவேண்டம் என தெரிவித்த நிலையில், வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் தாக்குதலை மேற்கொண்டனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசியல் களம்

## பாராளுமன்ற தேர்தல் -2024

# கல்முனைக்கு துரோகமிழைக்கப்பட்டுள்ளது சாய்ந்தமருது மக்கள் சந்திப்பில் ஜெமீல்

(நவநீதன்)

காலம் காலமாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தன்னகத்தே வைத்திருந்த கல்முனை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸுக்கு தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டதன் ஊடாக தனக்கான பிரதிநிதித்துவத்தை இல்லாமலாக்க பாரிய சதி ஒன்றை அரங்கேற்றியுள்ளனர் என சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் இடம்பெற்ற பாரிய அளவிலான பெண்கள் பங்கு கொண்ட சந்திப்பு ஒன்றில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் கலாநிதி ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த கலாநிதி ஜெமீல், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸுக்கு துரோகம் இழைக்கப்பட்டு உள்ளதை அறிந்து, கல்முனைக்கான பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை உணர்ந்த நான், புதிய ஜனநாயக முன்னணியின் ஊடாக எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை சகோதரர் ஹரீஸுக்கு வழங்கி கல்முனையை அழகு பார்க்க விரும்பினேன். என்றாலும் அவர் மனதளவில் உடைந்திருந்ததால் என்னை களத்தில் இறங்குமாறும் எனக்கு உதவுவதாகவும் கூறினார். அதன் பின்னரே இறுதி நேரத்தில் கையொப்பமிட்டு தேர்தலில் குதித்துள்ளதாகவும் தெரிவித்தார்.



நமது பிராந்தியம் பல்வேறு தேவைகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறது. மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவது என்றால் மக்களின் சார்பில் சிறந்த பிரதிநிதிகள் பாராளுமன்ற-த்துக்கு செல்ல வேண்டும். தற்போது களத்தில் இறங்கியுள்ளவர்களுடன் என்னையும் ஒப்பிட்டு நான் சிறந்தவன் என்றால் எனக்கு வாக்களியுங்கள். கடந்த காலங்களில் எனக்குக் கிடைத்த அதிகாரங்களை வைத்து இந்த பிராந்தியத்-துக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்களை செய்துள்ளேன். அத்துடன் நமது பிராந்தியத்தில் பாரிய பல்கலைக்கழகம் ஒன்று உருவாக மறைந்த தலைவருடன் இணைந்து பணியாற்றியுள்ளேன் என்றும் தெரிவித்தார்.

தான் சாதாரண குடும்பத்தில் பிறந்து கல்விகற்று, தன்னால் முடிந்தவைகளை செய்துள்ள-தாகவும் நமது பிராந்தியத்தி-னதும் மக்களினதும் தேவைகளை நன்கு அறிந்தவன் என்றும் மக்களின் பணிக்காக தன்னை எப்பவே அர்ப்பணித்துள்ளதாகவும் தெரிவித்தார்.
தனது அழைப்பை ஏற்று பாரிய அளவிலான பெண்கள் குழுமியுள்ளது தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் இந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் எப்போதும் பின்னிற்க மாட்டேன் என்றும் தெரிவித்தார்.

நிகழ்வின்போது ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவரும், தேசியப்பட்டியல் வேட்பாளருமான கலாநிதி அன்வர் எம் முஸ்தபா, அக்கட்சியின் தேசிய கொள்கை பரப்பு செயலாளர் நூருல் ஹுதா உமர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இணைப்பாளர் பர்சாத் கான், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சுகைல் அஸீஸ் சிரேஷ்ட அறிவிப்பாளர் ரோஷன், அஸ்வர் அப்துல் சலாம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# ஜனாதிபதி, முறையான திட்டமிடலில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்

### முபாறக் அப்துல் மஜீத் கருத்து

(பாறுக் ஷிஹான்)

எமது நாட்டில் புதிய அரசாங்கம் புதிய ஜனாதிபதியின் கீழ் வந்திருக்கின்றது.அந்த புதிய அரசாங்கத்தை நாங்கள் வரவேற்க வேண்டும். அனுரகுமார திசாநாயக்க ஒரு ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ இருக்காதவர். ஆனாலும் பாராளுமன்றத்தில் நீண்ட காலம் எம்.பியாக இருந்த அனுபவம் உள்ளவர். அவர் நாட்டை திறம்பட கட்டியெழுப்புவார் என நம்புகின்றோம் என உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் முப்தி தெரிவித்துள்ளார்.

கல்முனை பகுதியில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் இன்று கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது அரசாங்கம் சில விடயங்களில்




தடுமாறுவதை காண முடிகின்றது. எடுத்த உடனே அரசாங்கத்தை நாங்கள் விமர்சிக்க முடியாது.இன்னும் பல காலம் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

அதன் பின்னர் தான் நாங்கள் பல முடிவுகளை எடுக்க முடியும்.இந்த சூழலில் ஜனாதிபதி முறையான திட்டமிடலில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்ற ஆதங்கம் எங்களிடம் இருக்கின்றது. அண்மையில் முட்டை பிரச்சினை ஏற்பட்டிருந்தது. மீண்டும் பாஸ்போர்ட் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. இவ்வாறு சில பிரச்சினைகள் எழுகின்ற போது எமக்கு கவலையாக உள்ளது. அவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அத்துடன் ஜனாதிபதியின் கட்சியினர் முஸ்லீம்களின் தனியார் சட்ட நிலைமை பற்றி ஆங்காங்கே பேசி வருகின்றார்கள். எனவே ஜனாதிபதி இவ்வாறான பிரச்சிகைளை இனங்கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# ஜனாதிபதி நாட்டுக்கு வினோதங்களை காட்டிக்கொண்டிருக்கிறார்

எமது நாட்டிலிருந்து திருடப்பட்ட பணத்தையும், உகண்டாவில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தையும் மீளப் பெற்று, மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தில் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி, எமது நாடு எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகளுக்கு தீர்வை தருவோம் என தற்போதைய ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் தரப்பினர் கடந்த காலங்களில் பிரஸ்தாபித்தனர். மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்புகளை ஏற்படுத்தினர். உகாண்டாவுக்கு எடுத்துச் சென்ற பணம் திரும்பக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருக்கிறோம். திருடிய பணத்தை நாட்டுக்கு கொண்டு வந்து நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பார்கள் என கருதினாலும், ஜனாதிபதி தலைமையிலான ஜே.வி.பி அரசாங்கம் நாட்டுக்கு நகைச்சுவைகளை வழங்கி வருகிறது. நகைச்சுவைகளைக் காட்டி நாட்டை கொண்டு நடத்த முடியாது எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 பொதுத் தேர்தலை இலக்காக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை பிரதேச கட்சி செயற்பாட்டாளர்-களுடனான சந்திப்பொன்று நேற்றைய (03) தினம் ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை தேர்தல் தொகுதி அமைப்பாளர் சுதத் விக்ரமரத்ன ஏற்பாடு செய்த இச்சந்திப்பில் கட்சி செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தேர்தல் மேடைகளில் கடவுச்சீட்டுக்கான வரிசைகளை நிறுத்துவோம் என்று வீராப்பு பேசினர். இன்னும் நிலையான தீர்வை வழங்கவில்லை. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் கடவுச்சீட்டு வரிசைக்கு தீர்வை வழங்காது வரிசையை நீடிக்கவே நடவடிக்கை எடுத்துள்ளனர். இங்கு மக்கள் எதிர்பார்த்த முறைமை மாற்றத்தால் இந்த கடவுச்சீட்டு வரிசைக்கு இந்த அரசாங்கம் தீர்வை முன்வை-க்கவில்லை. முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்து வந்த முறையையே இவர்களும் பின்பற்றி வருகின்றனர்.

வரி குறைக்கப்படும், விலை சூத்திரங்கள் இல்லாதொழிக் கப்படும், உகண்டாவில் பதுக்கி வைத்துள்ள பணம் கொண்டு வரப்படும் என்று மேடைகளில் கூச்சலிட்டாலும், இறுதியில் ஜனாதிபதி தலைமையிலான ஜே.வி.பி அரசாங்கம் சர்வதேச நாணயத்திடம் மண்டியிட்டு எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அடிமையாகியுள்ளது என சஜித் பிரேமதாச இங்கு சுட்டிக்காட்டினார்.

# நாடாளுமன்றத்தில் அநுர அரசிற்கு பெரும்பான்மை ஏன் அவசியம்?

“அரகலய” எனும் மக்கள் எழுச்சியிற்கு பின்னர் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பி தேசிய மக்கள் சக்தியிற்கு ஆதரவு வழங்கியமையால் தற்போது அநுர குமார திஸாநாயக்க நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாக கடமைகளைச் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்.

அவரது தலைமையில் அமைந்திருக்கும் உலகின் மிகச்சிறிய இடைக்கால அரசின் தொழிற்பாடுள் மக்கள் மத்தியில் பெற்று வரும் வரவேற்பின் காரணமாக ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலுடன் தாம் முரண்படப் போவதில்லை மாறாக அவருடன் ஒத்துழைக்க நாம் தயாராக இருக்கின்றோம் என்றே எதிர்க்கட்சிகள் பிரச்சாரம் செய்யும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள புரட்சிகரமான முறைமைகள் மாற்ற நிகழ்ச்சி நிரலின் படி நாடாளுமன்ற அறுதிப் பெரும்பான்மையாவது அவர்களுக்கு தரப்பட்டால் மாத்திரமே நாடும் மக்களும் எதிர்பார்க்கின்ற இலக்குகளை நோக்கி பயணிக்க முடியும் என்பதில் இரு கருத்து இருக்க முடியாது.

இல்லாவிட்டால் பிரதான எதிர்க்கட்சி மற்றும் பலகூறுகளாக பிரிந்து எதிரும் புதிருமாக களம் கம்டிருக்கும் முன்னாள் ஆட்சியாளர்களது அணிகள் தமக்குள் பேரம் பேசி அமைக்கின்ற ஆட்சி நிச்சயமாக நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தப் போவதில்லை என்பதே அரசியல் அவதானிகளது அபிப்பிராயமாகும்.

ஏற்கனவே பிரதான எதிர்க்கட்சி உற்பட அனைத்து பிரதான கட்சிகளும் கூட்டணிகளாக இருப்பதனால் அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகள் உட்பட அனைத்து அரச உயர்பதவிகளுக்குமான வழமையான பேரம் பேசல் சூதாட்டங்கள் இடம்பெறுவதும் முதலீடுகளுக்கு ஏற்ப ஊழல் மோசடிகள் நிறைந்த வங்குரோத்து அரசியல் கலாச்சாரம் தலைதூக்குவதும் தவிர்க்க முடியாத விளைவுகளாகும்.



ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலின்படி முன்வைக்கப்-பட்டுள்ள புரட்சிகரமான மாற்றங்கள் தொடர்பிலான கொள்கை வகுத்தல்கள், சட்டவாக்கங்கள் மற்றும் அமுலாக்கங்களிற்கு தேவைப்படுகின்ற பாராளுமன்ற அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது போய்விட்டால் அரசியலமைப்பு சார் சட்ட திருத்தங்களிற்கு தேவைப்படுகின்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவது இன்னும் சிரமமான விவகாரமாக ஆகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நிலையில் 2000, 2002, 2004 ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் மீண்டும் நாட்டில் ஏற்படுவதனை பாராளுமன்றம் கலைக்கப்படுவதனை மற்றும் ஜனாதிபதிமீது உள்நாட்டு பிறநாட்டு சக்திகளின் அழுத்தங்களை கொண்டுவருதல் என பல சதிமுயற்சிகளுடன் கூடிய அரசியல் மற்றும் அரசியலமைப்பு நெருக்கடிகள் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன.

நிச்சயமாக அவ்வாறான ஒரு நெருக்கடி நிலைமையினை இனியும் இந்நாட்டு மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும், சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்!

தற்போதைய அரசியல் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாடு மீட்சிபெற நாட்டில் அமைதி சமாதானமும் அரசியல் ஸ்திரத் தன்மையும் இரண்டு பிரதான அடிப்படைக் காரணிகளாகும், கடந்த கால கசப்பான அனுபவங்களின் படி அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படாதிருக்க நாட்டு மக்கள் அனைவரும் ஒரு தேசமக்களாக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

அரசியல் ஸ்திரத்தன்மை என்பது வெறுமனே ஆளும் கட்சியினால் மாத்திரம் நிர்ணயமாகும் ஒரு விடயமல்ல, நாடாளுமன்றத்தில் பொறுப்பு வாய்ந்த பலமான எதிர்க்கட்சி அமைவதும் பன்மைத்துவ ஜனநாயக அரசியலில் பிரதான அம்சமாகும்.

பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் தெரிவின் போது தேசிய மக்கள் சக்தியாகவன்றி மக்கள் விடுதலை முன்னணியாக ஆளும் கட்சியினர் நடந்து கொண்டார்களோ என்ற பரவலான கேள்வியும், ஆதங்கமும் தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்க இடமிருக்கிறது.

இந்து பசுபிக் சமுத்திர பிராந்தியத்தில் ஆதிக்கப் போட்டா போட்டிகளில் ஈடுபட்டுவரும் பிராந்திய சர்வதேச வல்லரசுகளின் கேந்திர முக்கியத்துவமிக்க புவியரசியல் ஆடுகளமாக இலங்கை இருப்பதனையும் கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் பாரிய தலையீடுகள் இருந்து வருவதனையும் அதற்காக நாம் படிப்படியாகக் கொடுத்துவந்த பாரிய விலையே இன்றைய வங்குரோத்து நிலை என்பதனையும் நாம் அறிவோம்.

இந்த நிலையில் அவ்வாறான சக்திகளின் புவியரசியல் கெடுபிடிகளுக்காக சிறுபான்மைச் சமூகங்கள் மாத்திரமன்றி பல கூறுகளாக பிரிந்து நிற்கும் பெரும்பான்மைச் சமூகமும் பலிக்கடாக்களாக ஆக்கப்படுகின்ற அபாயம் இருப்பதனால் எமது தேசத்தின் ஒருமைப்பாடு அமைதி சமாதானம், சுயாதிபத்தியம், பாதுகாப்பு போன்ற அடிப்படை விடயங்களில் ஒரு தாய் மக்களாக நாம் புரிந்துணர்வுடன் அரசியல் களத்தில் ஆட வேண்டும்.

உருசிகண்ட கூலிப்படைகளும் முகவர்களும் தமக்கான சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கிறார்கள் என்பதனை விடவும் அவற்றை உருவாக்குவதற்காக ஓய்வின்றி இரவுபகலாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுவே உண்மையாகும்.

மஸீஹுத்தீன் இனாமுல்லாஹ்